ஸ்ரீ

# உறையூர் கமலவல்லித் தாயார்

# ந்நிதி வைபவம்

எழுதியவர் :

**எஸ். நரசிம்ம அய்யங்கார்**

உத்தம நம்பி திருமாளிகை, மேல உத்தரவீதி, ஸ்ரீரங்கம்

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை, சென்னை

1941

# முகவுரை

இச்சிறிய நூல், சுருக்கமாகவும், தெளிவாகவும் வெளி தேசங்களிலிருந்து வரும் யாத்திரீகர்களுக்கு, இந்த சந்நிதியைப்பற்றி விவரமாகத் தெரிந்து கொள்ளுவதற்காக எழுதப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் எழுதுவதற்கு முக்கிய காரணமாக உள்ள சென்னை ஹிந்துமத பரிபாலன போர்டு கமிஷனர், ராவ்பஹதூர் - ஸ்ரீமான் சி. எம். இராமச்சந்திர செட்டியார் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்காக என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் இத[illegible] தேவஸ்தானம் சார்பாகச் செலுத்துகிறேன். இப் புத்தக[illegible] எழுதுவதற்கு வேண்டிய விஷயங்கள் தெரிந்துகொண்[illegible] அதிக ஊக்கத்துடன் உதவி செய்த, உத்தமநம்பி திருமாளிகையில் இருக்கும் ஸ்ரீமான் எஸ். நரசிம்ம அய்யங்கார் அவர்களுக்கும் நான் என் நன்றியைச் செலுத்துகிறேன்.

ஸ்ரீரங்கநாதஸ்வாமி
வகையரா
தேவஸ்தானம்,
ஸ்ரீரங்கம்

D. மாதவன் பிள்ளை, B. A., B. L.
ஆக்டிங் எக்ஸிகியூடிவ் ஆபீஸர்.

66090

வ22:45:78

# ERRATA LIST

## உறையூர் சன்னதி வைபவம்

| Page | Line | For | Read |
|---|---|---|---|
| 7 | 15 | சுகத்தை | சரீரத்தை |
| 7 | 17 | பரம தத்துவ | பரமசத்வ |
| 9 | last line | எடுத்துவந்த | எடுத்துவந்து |
| 11 | 3, 7, 10 | என்றும் | என்னும் |
| | 3 | தேனும் | தேறும் |
| | 15 | என்றென்றெவனையும் | என்றென்றேவனையும் |
| 12 | 11 | சொல்லப்படுகிற சுயம்வரத்தை | சொல்லப்படுகிறதே தவிர சுயம்வரத்தை |
| 18 | last but one line | நிவேதனம் தளிகை | நிவேதனமாகும் தளிகை |

## சிங்கர் கோவில்

| Page | Line | For | Read |
|---|---|---|---|
| 27 | 6 | சந்திதியில் | சந்நதியின் |
| 29 | 22 | அவா இடது | அவரை இடது |
| 30 | last but one line | வாஸலுக்கு | வாசலுக்கு |

O823:45:78

# அட்டவணை

பக்கம்


1. உறையூரின் விவரம் ... 5
2. ஸ்தலத்தின் மஹாத்மியம் ... 5
3. கமலவல்லித்தாயார் உறையூரில் அவதரித்த காரணம் ... 7
4. கமலவல்லித்தாயார் அவதரித்தல் ... 9
5. அரங்கனைக் கண்டு கமலவல்லி காமுறுதல் ... 10
6. கமலவல்லியின் நிறையழிவை நந்தசோழனுக்கு அவர் பத்தினி அறிவித்தல் ... 10
7. கமலவல்லியின் திருக்கல்யாணம் ... 12
8. கமலவல்லி சீர்வரிசைகளுடன் ஸ்ரீரங்கம் சேருதல் 12
9. நந்தசோழன் தன் சொத்துக்களை ரங்கநாதனுக்கு சமர்ப்பித்தல் ... 13
10. உறையூரில் கமலவல்லிக்கும் அழகியமணவாளனுக்கும் கோவிலமைத்தல் ... 13
11. உறையூர் கோவிலின் விவரம் ... 14
12. சேனை முதலியார் சந்நிதி ... 14
13. உக்கிராணமும், தேவஸ்தான ஆபீசும் ... 15
14. நம்மாழ்வார் சந்நிதி ... 15
15. உடையவர் சந்நிதி ... 16
16. திருப்பாணாழ்வார் சந்நிதி ... 16
17. குளம் ... 18
18. வெள்ளிக்கிழமை மண்டபம் ... 18
19. மடப்பள்ளி ... 18
20. வசந்த மண்டபம் ... 19
21. ஊஞ்சல் மண்டபம் ... 19
22. யாகசாலை ... 19
23. தெப்ப மண்டபம் ... 19
24. அத்யயன உத்சவ மண்டபம் ... 20
25. சந்நிதியின் முன்மண்டபம் ... 20

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 26. | சந்நிதி கருடன் கோவில் | ... | 21 |
| 27. | மஹாமண்டபமும் அர்த்தமண்டபமும் | ... | 21 |
| 28. | கர்ப்பக்கிரஹம் | ... | 22 |
| 29. | உத்ஸவங்கள் | ... | 22 |
| 30. | நிவேதனங்கள் | ... | 23 |
| 31. | சந்நிதியின் ஜீர்ணோத்தாரணம் | ... | 23 |
| 32. | வரவு செலவு | ... | 24 |


---

**உறையூர், ஸ்ரீநாச்சியார் கோவிலிலுள்ள**


**சந்நிதிகள், மண்டபங்கள் முதலியவைகளின்**

## விவர ஜாபிதா

1. ஆரியபடாள் வாசல்
2. ஆஞ்சனேயர்
3. ஸ்ரீபண்டாரம்
4. சேனை முதலியார்
5. ஆபீஸ்
6. ஸ்டோர்
7. டின் அறை
8. நம்மாழ்வார் சந்நிதி
9. உடையவர் சந்நிதி
10. திருப்பாணாழ்வார் சந்நிதி
11. கருடன் சந்நிதி
12. தாயார் சந்நிதி
13. திருப்பாணாழ்வார் கண்ணாடி மால்
14. மடப்பள்ளி
15. தெப்பக்குளம்
16. நந்தவனம்
17. வெள்ளிக்கிழமை மண்டபம்
18. கண்ணாடி அறை
19. நந்தவனம்
20. தாயார் சந்நிதி மடப்பள்ளி
21. வசந்த மண்டபம்
22. ஊஞ்சல் மண்டபம்
23. நந்தவனம்
24. யாகசாலை
25. சொர்க்க வாசல்
26. கிணறு
27. மணல்வெளி
28. தெப்ப உற்சவ மண்டபம்
29. கொட்டகைத் திருநாள் மண்டபம்

---

# உறையூர் ஸ்ரீ நாச்சியார் கோவில்



தோன்றி நந்தசோழனை ராஜாவின் குழந்தை இல்லாக் குறையைத் தீர்த்து இவ்விடம் உறைந்த காரணம்பற்றி இந்த ஊருக்குத் திருஉறையூர் என்றும் உறந்தை என்றும் பெயர் ஏற்பட்டது.

கமலவல்லியும் ஸ்ரீரங்கநாதனிடத்தில் அத்தியந்தப் பக்தியைச் செய்ய, அந்தப் பக்தி காரணமாக ஸ்ரீரங்க நாதனும் கமலவல்லியை ஆட்கொள்ளும் பொருட்டு அவரைக் கல்யாணம் செய்துகொண்டு தமது திருவடிகளில் ஐக்கியம் அடையச்செய்தார். அதன் மூலமாகப் பெண்ணாய்ப் பிறந்தவர்கூட பகவத் பக்தியைச் செய்து மோக்ஷபிராப்தியை அடையலாம் என்னும் தத்துவத்தை லோகத்தாருக்குக் காட்டிக்கொடுத்த இடமாயிற்று.

மூலவரான அழகிய மணவாளனும் தாம் முந்தி கமலவல்லியை ஆட்கொண்டு அருள்புரிந்ததை எல்லோருக்கும் காட்டிக்கொடுத்துக் கொண்டு கல்யாண அவசரத்தில் சேவை கொடுத்தருளுகிறார்.

ஸ்ரீரங்கத்திலுள்ள உத்சவர் ரங்கநாதனும் வருஷத்துக்கு ஒரு தடவை இந்த ஊருக்கு எழுந்தருளிக் கமலவல்லிக்குத் தாம் கிருபை பண்ணினதை எல்லோரும் தெரிந்து உஜ்ஜீவிக்கும்பொருட்டு உத்சவர் கமலவல்லியுடன் ஏகாசனத்திலிருந்து சேவை சாதித்துக்கொண்டு "தான் தன் பக்தர்களுக்குத் தன்னையொக்க அருள்புரிபவன்" என்னும் தத்துவத்தைக் காட்டிக்கொடுக்கிறார்.

ஸ்ரீமந்நாராயணனுடைய நியமனத்தின்படி அவருடைய ஸ்ரீவத்ஸ அம்சமாய்த் திருப்பாணாழ்வார் இந்த உறையூரில் அவதரித்து ஸ்ரீரங்கநாதனை வழிபட்டு அவருடைய சாக்ஷாத்காரத்தைப் பெற்று அவ்வனுபவத்தினால் ஏற்பட்ட பிரீதி ஆனந்தத்தினால் அமலனாதிபிரான் என்னும் பிரபந்தத்தைப் பாடி "என்னமுதனைக்

கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்று சொல்லிப் பரம வைராக்கியத்தை யடைந்து ஸ்ரீரங்க நாதன் திருவடிகளில் சாயுஜ்யத்தைப் பெற்றார். இதனால் ஞானபக்தி வைராக்கியங்களை யுடையவர் யாராயிருந்தாலும் பகவானுடைய கிருபையினால் அவன் திருவடி சேரப் பெறலாமென்னும் தத்துவத்தைக் காட்டிக் கொடுத்தவராயிற்று.

மேலே சொல்லியபடி கமலவல்லியும் திருப்பாணாழ்வாரும் தங்களுடைய அவதாரங்களால் ஸ்திரீகளும் தாழ்ந்த வர்ணத்தவர்களும் பக்தி செய்யவும் பகவத் பிராப்தியை அடையவும் தகுதியில்லாதவர்கள் என்று சொல்லப்பட்ட அந்தப் பெருங் குறையை நீக்கி வைத்த இடம் இந்தத் திவ்ய தேசமே.

இந்த க்ஷேத்திரத்தில் அவதரித்த மேற்சொல்லிய இருவரும் தங்களுடைய பஞ்சபூத மயமான சுகத்தைத் தங்கள் பக்தி விசேஷத்தாலும் தியான பலத்தினாலும், பரம தத்துவ மயமான ஆகாச சரீரமாக்கிக் கொண்டு எம்பெருமான் திருவடிகளில் ஐக்கியத்தைப்பெற்றுத் தங்களைப்போலவே லோகத்தாரும் பேறுபெற்று வாழ வேண்டியதற்குரிய படிப்பைக் கற்றுக்கொடுக்க அவதரித்தவர்களானார்கள்.

இவ்வளவு மகிமை வாய்ந்த மஹானுபாவர்களால் நடையாடப்பெற்று அவர்களுடைய பாததூளி பட்டதினால் இந்த ஸ்தலம் ஒரு திவ்ய தேசமாகும் பாக்கியத்தைப் பெற்றது.

## கமலவல்லித் தாயார் உறையூரில் அவதரித்த காரணம்

ஸ்ரீவைகுண்டத்திலுள்ள ஸ்ரீமந் நாராயணனைக் கிட்டி நித்தியானந்தத்தை அனுபவிக்கத் தேவையான

ஞானபக்தி வைராக்கியாதிகளைக் கொஞ்சமேனும் உடைத்தாயிராமலும், சரீராதி கரணங்களில்லாமலும் பிரகிருதியிலே ஆழ்ந்து கிடக்கிற ஜீவாத்மாக்களின் பரிதாப நிலையைக்கண்டு பகவான் பரம கிருபையோடு, சரீராதிகளை ஜீவாத்மாக்களுக்கு முதலில் கொடுத்தருளினார். அவர்களும் அந்தச் சரீராதிகளைப் பகவானையடைய வேண்டிய வழிகளில் உபயோகப்படுத்தாமல் சப்தாதி விஷயங்களிலே ஈடுபடுத்தி ஆற்றைக் கடக்கக் கொடுத்த தெப்பத்தை நீர் போக்கிலே விட்டு, கடலுக்குள் புகுவாரைப்போல் மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்துகொண்டு சம்ஸாரமாகிற கடலிலேவிழுந்து நோய்பட்டார்கள். இதைக்கண்ட ஸர்வேசுவரனும் ஸம்ஸாரிகளான ஜீவர்கள் சத்வகுணம் மேலிடப்பெற்றுத்தேகாத்ம ஈசுவர தத்வங்களை நன்குணர்ந்து பிறவிக்கடல் தாண்டும் பொருட்டு வேத சாஸ்திரங்களைக் கொடுத்தார். சாஸ்திர தத்துவங்களை அறிந்து ஜீவர்கள் தங்களைப் பகவானுடைய அடிமை என்றெண்ணுமல், தங்களைச் சுவதந்திரர்களாக நினைத்துகொண்டிருப்பதைத் தாமே நேரில் வந்து தவிர்த்து அவர்களைத் தன்வழிப்படுத்த இராமகிருஷ்ணுதி அவதாரங்களைச் செய்து தர்ம உபதேசங்களைப் பண்ணியும் அவைகளை அனுஷ்டித்தும் காட்டினுர். சம்சாரத்தில் ஈடுபட்டுள்ள ஜீவர்கள் அவைகளைப் பயன்படுத்திக்கொள்ளாமலும் கொஞ்சமேனும் திருந்தாமலும் நான் என்னும் அகப்பற்றையும் எனது என்னும் புறப்பற்றையு முடையவர்களாய் அதமமான கதிகளுக்காளாகி நிற்பதைக்கண்டு இவர்களைக் கைவிடமாட்டாமல், இவர்களைத் திருத்தவேண்டுமாஞல் இவர்களுடன் கலந்திருந்தே மீட்பதுதான் உபாயமென்று நினைத்து, மானைக்காட்டி மானை மடக்குவாரைப்போல்

தம்முடைய ஸ்ரீவத்ஸ, கௌஸ்துபாதிகளையும், ஸ்ரீ, பூமி, நீலாதேவிகள் முதலானவர்களையும் நித்ய சூரிகளையும் பூமியில் பலவருணங்களிலும் பிறந்து பக்தி மார்க்கத்தை அனுஷ்டித்துக்காட்டி ஜீவாத்ம உத்தாரணங்களைச் செய்யும்படி பகவான் நியமித்தார். பகவானின் ஆக்ஞைப்படி பூமிக்குச்சென்று ஆவிர்ப்பவிக்கத்தக்க கால தேசங்களை ஸ்ரீதேவி எதிர்பார்த்த வண்ணமாயிருந்தார்.

இப்படி யிருக்கும்போது சோழராஜாக்களின் தலை நகராயிருந்த உறையூரில் அரசுபுரியும் தர்மவர்மாவின் வம்ஸஸ்தனுன நந்த சோழராஜனுக்குச் செல்வம் முதலான மற்ற எல்லா நிறைவுகளிருந்தும் குழந்தை யில்லாக்குறைவே அவரை மிகுந்த வருத்தத்திற்குள் ஆழ்த்தி வந்தது. அதை நிவர்த்தித்துக் கொள்ளும் பொருட்டு அவரும் தாம் வழிபடும்தெய்வமான ரங்கநாத னைக்குறித்துத் தபசு பண்ணினுர். அவருடைய கடுமையான தபசைக் கண்டு மெச்சின ரங்கநாதன் ராஜாவுக்கு ஒரு சந்தானத்தை அளிக்கக்கருதி ஸ்ரீதேவி யைப்பார்த்து “நாம் ஏற்கனவே நியமித்தபடி நீ நந்த சோழனுக்கு ஒரு பெண்ணாய்த் தோன்றிப் பக்தி மார்க் கத்தை அனுஷ்டித்து அதை லோகத்தார்களுக்குக் காட் டிக் கொடுத்துவிட்டுவா” என்று ஆக்ஞாபித்தார்.

## கமலவல்லித் தாயார் அவதரித்தல்

அரங்கனின் நியமனப்படி ஸ்ரீதேவி உறையூரில் ஒரு தாமரை ஓடையிலுள்ள ஒரு தாமரைப்பூவிலே ஒரு பெண்குழந்தையாய் ஆவிர்ப்பவித்து நந்தசோழராஜனுக் குத் தன்னைத் தோற்றுவித்தாள். குழந்தையைக் கண்ட ராஜனும் அதிக சந்தோஷ முடையவராய்க் குழந்தை யைத் தமது அரண்மனைக்கு எடுத்துவந்த கமலத்தில்

அவதரித்த காரணத்திஞல் கமலவல்லி என்று பேரிட்டு, அதிக ப்ரேமத்தோடு வளர்த்து வந்தார். கமலவல்லியும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துவந்து ஒத்த பெண்களுடன் சேர்ந்து விளையாடும் பருவத்தை அடைந்தாள்.

## அரங்கனைக் கண்டு கமலவல்லி காமுறுதல்

ஒருநாள் தோழிகளுடன் பூக்கொய்யும்பொருட்டு நந்தவனத்துக்குக் கமலவல்லி சென்றிருந்தபோது ஸ்ரீரங்கநாதன் குதிரை ஏறிப் பலாச தீர்த்தத்திற்கு வேட்டையாடச் செல்லும்பொழுது இந்த நந்தவனத்திற்குள் நுழைந்து கமலவல்லியின் முன்தோன்றி, அவருக்கு மன்மதனைக் காட்டிலும் அதிக அழகுடையவராய் விபவாவதாரமாகத் தம்மைக் காட்டிக் கொடுத்தார். கண்டவர் தம்மனதைப் பறிகொடுத்துவிட்டு, "என்னரங்கத் தின்னமுதர் குழலழகர், வாயழகர் கண்ணழகர்" என்று சொல்லி அதே தியானத்திலாழ்ந்து கிடக்கச் செய்ய வல்ல ரங்கநாதனைக் கண்ட கமலவல்லியும் அவருடைய வடிவழகில் ஈடுபட்டு மோஹித்து மூர்ச்சித்தார். இதைத் தோழிகள் கண்டு கமலவல்லியைத் தேற்ற அவரும் தெளிந்து அரண்மனைக்குச் சென்று பைத்தியம் பிடித்தவர் போலிருந்தார்.

## கமலவல்லியின் நிறையழிவை நந்தசோழனுக்கு அவர் பத்தினி அறிவித்தல்

கமலவல்லியின் நிறையழிவைக் கண்ட நந்தசோழன் பத்தினி, ராஜாவிடம் சென்று கமலவல்லிக்கு ஏற்பட்டிருக்கும் விகாரங்களை அடியில் வருமாறு தெரியப் படுத்திஞள். "இட்டகா லிட்ட கைகளா யிருக்கும்,

எழுந்துலாய் மயங்கும் கைகூப்பும் கட்டமே காத லென்று மூர்ச்சிக்கும் சிட்டனே செழுநீர் திருவரங்கத் தாய்" என்றும், "சிந்திக்கும் திசைக்கும் தேனும் கை கூப்பும் திருவரங்கத்துள்ளாய்" என்றும், "வந்திக்கும் ஆங்கே மழைக்கண் நீர்மல்க வந்திடா யென்றென்றே மயங்கும், சந்தித்து உன்சரணம் சார்வதே வலித்த தையலை மையல் செய்தானே" என்றும், "பூண்மு லைமேல் சாந்தணியாள் பொருகயற்கண் மையெழுதாள் பூவை பேணாள், ஏணறியாள் எத்தனையும் திருவரங்கம் எங்கே?" என்றும், "தாதாடு வனமாலை தாராணோ என்றென்றே தளர்ந்தாள் காண்மின், யாதானு மொன்று உரைக்கில் எம்பெருமான் திருவரங்க மென்னும்", "பந்தோடு கழல் மருவாள் பைங்கிளியும் பாலூட்டாள் பாவை பேணாள் 'வந்தாணோ' 'திருவரங் கன் வாராணோ' என்றென் றெவனையும் சோரும் சந் தோகன் பௌழியன் ஐந்தழலோம்பு தைதிரியன் சாம வேதி அந்தோ வந்து என்மகளை செய்தனகள் எங்ஙனம் நான் சொல்லுகேனே" என்று மொழிந்தாள்.

இதைக்கேட்ட நந்தசோழனும் தான் நேரில்சென்று விசாரித்துத் தெரிந்துகொள்ள நினைத்து அந்தப்புறம் சென்று கமலவல்லியை நோக்கி "மையல்செய்து உன்னை மனங்கவர்ந்தவன் யாரம்மா" என்று வினவ கமலவல்லி யும், "மையல்செய்து என்னை மனங்கவர்ந்தவன் தண் புனல்சூழ் திருவரங்கத் துள்ளான்" என்றும், "வெய்ய வாள் தண்டு சங்கு சக்கரம் வில்லேந்தும் விண்ணோர் முதல்" என்றும், "பைகொள் பாம்பணையான்" என்றும் பதில் கூறித், தன்னைச் சீக்கிரம் ரங்கநாதனுக்குப் பாணிக் கிரகணம் பண்ணிக்கொடுக்குமாறு வேண்டிக் கொண் டார்.

## கமலவல்லியின் திருக்கல்யாணம்

கமலவல்லி மன்மத விகாரத்தால் படும் பாட்டை யும், அவருக்கு ரங்கநாதனை அடையும் விஷயத்திலுள்ள த்வரையையும் நந்தசோழன் கண்டு, இனித் தாமதிக்க முடியாதென்று எண்ணி, தமது மந்திரிகளுடன் ஆலோ சித்து, கமலவல்லியை ஸ்ரீ ரங்கராஜருக்குக் கன்னிகாப்ர தானம் பண்ணிக்கொடுத்துத் திருக்கல்யாண மகோத்ஸ வத்தை வெகு சிறப்பாக உறையூரில் நடத்திவைத்தார்.

கமலவல்லி கல்யாணத்தைப்பற்றிப் பேசும் கோவி லொழுகு திவ்யஸூரி சரிதங்களில் கமலவல்லிக்கு விவா கம் நடந்ததாகச் சொல்லப்படுகிற சுயம்வரத்தைப் பற் றின விஷயம் காணவில்லை. ரங்கநாதனின் அந்தரங்கக் கைங்கர்ய பரரான திருமலைநாத ஸ்ரீ உத்தமநம்பி இயற்றி யுள்ள "லக்ஷ்மி காவ்யம்" என்னும் கிரந்தத்தில் கமல வல்லிக்குச் சுயம்வரம் நடந்ததாகவும் அதற்கு அநேக சிவஸ்தலங்களிலுள்ள சிவபெருமான்களும் விஷ்ணு ஸ்தலங்களிலுள்ள எம்பெருமான்களும் வந்திருந்ததாக வும் சொல்லப்படுகிறது.

## கமலவல்லி சீர்வரிசைகளுடன் ஸ்ரீரங்கம் சேருதல்

விவாகமான பிறகு கமலவல்லியைக் கோயிலுக்கு அனுப்பும்போது ஸ்திரீ தனமாக அநேகமான திருவாப ரணங்களுடனும், திரவியங்களுடனும், முன்னூற்றறு பதின் கலம் தங்க அமுதுபடியும் அதற்கு வேண்டிய பருப்பமுதும், கொம்பஞ்சு கொடியஞ்சு கரியமுதும் அவைகளுக்கு வேண்டிய ஸம்பாரங்களும் தங்கத்திலேயே பண்ணி அவைகளுடனும், பணிவிடைக்காக நூறு பரி சாரிகை (தாதி)களையும் சேர்த்து நந்தசோழன் அனுப்பி வைத்தார். கமலவல்லியும் ஸ்ரீரங்கம் கோவிலிலே வந்து

திருமணத் தூணுக்குள் புகுந்தவுடன் ரங்கநாதன் திருவடிகளில் ஐக்கியமாகி மறைந்து போனார். கமலவல்லியுடன் வந்த தாதிகளின் வம்சஸ்தர்கள் ஸ்ரீரங்கம் கோவிலில் "உறையூர் வல்லி கூட்டத்தார்" என்னும் பெயருடன் கைங்கர்யம் செய்து வருகிறார்கள்.

## நந்தசோழன் தன் சொத்துக்களை ரங்கநாதனுக்குச் சமர்ப்பித்தல்

இப்படிக் கமலவல்லி மறைந்துபோனதைக்கண்ட நந்தசோழனும் தமக்கு வேறு சந்ததி இல்லாததனால் தம்முடைய சர்வ சொத்தையும் சந்தோஷத்துடன் ஸ்ரீரங்கநாதனுக்கு அர்ப்பணம் பண்ணி மண்டபகோபுர பிரகாரங்களைக் கட்டி வைத்தார்.

## உறையூரில் கமலவல்லிக்கும் அழகிய மணவாளனுக்கும் கோவில் அமைத்தல்

அதுவுமன்றி நந்தசோழன் தம்முடைய ராஜதானியாகிய உறையூரில் ஒரு கோவில் கட்டி அதில் தமக்குக் குமாரத்தியாய்த் தோன்றிய கமலவல்லியையும் அவரைத் தமது அழகால் வசீகரித்த மணவாளப் பிள்ளையாகிய ஸ்ரீரங்கநாதனையும் பிரதிஷ்டிப்பித்தார். கமலவல்லியை மணந்ததுமுதல் ரங்கநாதனுக்கு "அழகிய மணவாளன்" என்று பெயராயிற்று.

நாகப்பட்டினத்திலுள்ள சுந்தரராஜப் பெருமாள் வடிவழகில் ஈடுபட்டு ஆச்சரியத்தையடைந்து "அச்சோ ஒருவரழகியவா" என்று புகழ்ந்து பேசத் தொடங்கிய திருமங்கையாழ்வார் அந்தச் சுந்தரராஜனார் அழகில் யாருக்கு ஒப்பாயிருப்பரென்று சொல்ல நினைத்தபோது "கோழியும் கூடலும் கோயில்கொண்ட கோவலரே ஒப்பர்" என்று அருளிச்செய்தார். அதாவது கோழியாகிய

உறையூரில் எழுந்தருளியிருக்கும் அழகிய மணவாள ருக்கு ஒப்பாயிருப்பர் என்ருர். இதனுல் அழகிய மண வாளருக்கு அழகில் ஒப்பார் உளரேயன்றி மிக்கார் இல்லை என்பது தெரிய வருகிறது.

## உறையூர் கோவிலின் விவரம்

இந்தக் கோவிலுக்குக் கர்ப்பக்கிரகத்தைச் சுற்றிலு முள்ள பிரதக்ஷணத்தைத் தவிர ஒரு பெரிய பிரகார மிருக்கிறது. இந்தப் பிரகாரத்திற்குள் கமலவல்லித் தாயாரின் உத்ஸவங்களுக்குத் தேவையான சகல மண்ட பங்களும், குளமும் சேனை முதலியார், ஆழ்வார் சந் நிதிகளும் இருக்கின்றன.

இந்த சந்நிதியில் கமலவல்லியும் அழகிய மண வாளனும் ஸ்ரீரங்கத்தை நோக்கிக்கொண்டு வடக்கு முகமா யிருப்பதால் கோவிலின் வாசலும் வடவண்டை பக்கத்திலிருக்கிறது. இதைத்தவிர வேறு வாசல் கிடை யாது.

இந்த வாசலில் நுழைந்து உள்ளே சென்ருல் ஒரு நான்குகால் மண்டபமும் சின்ன ஹனுமார் சந்நிதியு மிருக்கிறது. நாலுகால் மண்டபத்தை அடுத்துக் கர்ப்பக் கிரஹம் முதலானவைகளை நான்குபுறமும் சுற்றிக்கொண் டிருக்கும் ஒரு உயர்ந்த மண்டபமிருக்கிறது.

## சேனை முதலியார் சந்நிதி

மேற்சொன்ன மண்டபத்தின் கீழ்ப்பாகத்தில் மண் டபத்திற்கு வடபக்கத்தில் இந்தச் சந்நிதி இருக்கிறது. இதில் சேனை முதலியார் மூலவர் மட்டும் எழுந்தருளி யிருக்கிருர். நான்கு காலங்களிலும் பெருமாள் நாச்சி யார் அமுதுசெய்யும் பிரசாதங்கள் இவருக்கு நிவேதனம்

செய்யப்படுகிறது. ஐப்பசிப் பூராடம் இவர் திருநக்ஷத்திரம். அது கொண்டாடப்படுகிறது.

## உக்கிராணமும், தேவஸ்தான ஆபீசும்

உறையூர் கோவிலின் வடகிழக்கு மூலையில் இந்தக் கோவிலுக்கு ரங்கநாதன் சந்நிதியிலிருந்து அனுப்பப்படும் சகல சாமான்களும் வைக்கப்படும் உக்கிராணம் இருக்கிறது. அதற்கு மேற்கில் தேவஸ்தானம் ஆபீஸ் இருக்கிறது.

## நம்மாழ்வார் சந்நிதி

மேலேசொன்ன தேவஸ்தானம் ஆபீசுக்குத் தெற்கில் இந்தச் சந்நிதி இருக்கிறது. இதில் ஆழ்வார்களுக்குள் தலைவராய் விளங்கும் பிரபன்ன ஜனகூடஸ்தரான நம்மாழ்வார் மூலவரும் உத்சவரும் எழுந்தருளியிருக்கிறார்கள். இந்தச் சந்நிதி நாலுபக்கம் சுவர்களிலும், கர்ப்பக்கிரஹம் சுவர்களிலும், நரசிம்மாவதாரம், மத்ஸ்ய வராஹாதி அவதாரங்கள், ஆழ்வார் ஆசார்யர்களுடைய வைபவங்கள், மற்றும் நீதிகளைப் போதிக்கும் அம்பரீஷாதிகளுடைய விருத்தாந்தங்கள், யமதண்டனைகள் ஆகிய இவைகள் வெகு அழகாகச் சித்திர ரூபமாய் எழுதப்பட்டிருக்கிறது. இது அவசியம் பார்க்கத் தகுந்தது.

நம்மாழ்வாரின் வருஷத் திருநக்ஷத்திரமான வைகாசி விசாகத்தில் ஆழ்வார் கமலவல்லி சந்நிதிக்குச் சென்று மங்களாசாசனத்தைச் செய்து மரியாதைகளைப் பெற்று மேளம் முதலான கோவில் பிருதுகளுடன் திருவீதி வலம் வந்து தமது சந்நிதிக்குள் எழுந்தருளினவுடன் கமலவல்லி சந்நிதியிலிருந்து அலங்காரம் வந்து சேவை சாற்றுமுறை நடைபெறும்.

## உடையவர் சந்நிதி

இது நம்மாழ்வார் சந்நிதிக்குத் தெற்கிலுள்ளது. இதில் விசிஷ்டாத்வைத சித்தாந்தஸ்தாபகரான ஸ்ரீராமா நுஜர் எழுந்தருளியிருக்கிறார். இவர் வருஷத் திருநக்ஷத் திரம் சித்திரையில் திருவாதிரை யன்றைக்கு மங்களா சாஸனம் முதலானவை நம்மாழ்வார் ஒப்பந்தம் நடை பெறுகின்றன.

## திருப்பாணாழ்வார் சந்நிதி

திருப்பாணாழ்வார் உறையூரில் அவதரித்தவராத லால் மெய்ஞ்ஞானத்துறையூரான் என்னும் பெயரைப் பெற்றார். இவர் பிறப்பால் உறையூரின் பிரபாவம் அதிகரித்தது. இவர் செந்நெல் கதிரில் தோன்றி. தாழ்ந்த வகுப்பினராகக் கருதப்பட்டு வந்த பாணர் குல தம்பதிகளுக்குக் கிடைத்து அவர்களால் வளர்க்கப் பட்டு வந்தார். இவர் மூன்று வயதிலேயே நல்ல ஞானத்தைப்பெற்று, தமது குலத்தொழிலாகிய வீணை வாசிக்கும் கான வித்தையில் கைதேர்ந்தவராக விளங்கி யதுமன்றி பகவத் பக்தியிலும் மிகச் சிறந்தவராய்க் காவேரிக்கரையில் பிரதி தினமும் ஸ்ரீரங்க விமானத்தை நோக்கிக்கொண்டு கான ரூபமாகத் தோத்திரங்களைப் பாடிக்கொண்டு வந்தார். ஸ்ரீரங்கநாதனும் இவரை ஆட்கொள்ள நினைத்த தினத்தில், இவர் தியானத்தில் ஆழ்ந்து மெய்ம்மறந்து இருந்தார். அது சமயம் பெரு மாளுக்குத் திருமஞ்சனம் கொண்டுவரச் சென்றவர்கள் இவர் பேரில் கல்லை எறிய அதுபட்டு உணர்ச்சி பெற்று எழுந்திருந்து விலகிக்கொண்டார். திருமஞ்சனமும் கொண்டுவரப்பட்டது. ரங்கநாதனும் தமது கைங்கர்ய பரர்கள் ஆழ்வார் விஷயத்தில் செய்த அபராதத்திற்கு

மனம் நொந்து சந்நிதியிலிருந்த லோகஸாரங்க முனியை அழைத்து ஆழ்வாரைத் தமது தோளில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வரும்படி கட்டளையிட்டார். அம் முனியும் ஆழ்வாரை அழைத்தபோது தாம் ஸ்ரீரங்கத்தை மிதிக்க யோக்கியதை இல்லாதவரென்று சொல்லி ஆழ் வார் வர மறுத்தார். முனியும், ஆழ்வாரைப் பலாத்கார மாய்த் தமது தோளில் எடுத்துக்கொண்டு வந்தார். வரும்பொழுதே ஆழ்வார் ரங்கநாதனுடைய தியானத் தில் ஆழ்ந்துவிட்டார். பெருமாளும் தமது அவய வங்களை ஒன்றன்பின் ஒன்ருய் ஆழ்வாருக்குத் தோற்று வித்தார். ஆழ்வாரும் தாம் கண்டனுபவித்த ஒவ் வொரு அவயவத்திற்கும் ஒவ்வொரு பாடல் பாடிக் கடைசியாக ரங்கநாதனுடைய ஸாக்ஷாத்காரத்தை (தரிசனத்தை)ப் பெற்று அதற்குப் பிறகு ப்ரா கிருத வஸ்துக்கள் ஒன்றையும் தாம் காணுமலிருக்கச் செய்ய வேணுமென்று ரங்கநாதனைப் பிரார்த்தித்து அவருடைய திருவடிகளில் ஐக்கியமானுர். ஆனபடியால் இவரை " காட்டவே கண்ட பாதகமல நல்லாடையுந்தி• தேட்டரு முதர பந்தம் திருமார்வு கண்டம் செவ்வாய், வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனிப்புகுந்து• பாட்டினுல் கண்டு வாழும் பாணர் " என்று போற்று கிருர்கள்.

இந்த மஹாபுருஷருக்குத் திருநக்ஷத்திரந்தோறும் எழுந்தருளியிருப்பதற்கு ஓர் அழகிய கண்ணுடி அறை அமைக்கப்பட்டிருக்கிறது. வருஷத் திருநக்ஷத்திரமாகிய கார்த்திகையில் ரோகிணிக்கு முன்னிருந்து பத்து நாள் உத்ஸவம் நடக்கிறது. உத்ஸவத்தில் பிரதி தினமும் கமலவல்லி அழகிய மணவாளர்களை மங்களாசாஸனம் செய்து மரியாதை பெற்றுக்கொண்டு ஆழ்வார் வீதி

வலம் வந்து கோஷ்டி சாற்றுமுறை முதலானவை நடக்கின்றன. கமலவல்லித் தாயாருடைய ஒவ்வொரு புறப்பாட்டிலும் சேனை முதலியாருக்கு மரியாதையானவுடன் இந்த ஆழ்வாருக்கு ஸரமும் சடாரியும் சாதிக்கப்படுகின்றன.

## குளம்

மேற்சொல்லிய ஆழ்வார் சந்நிதிக்குத் தெற்கில் குளமிருக்கிறது. இதில் தாயார் தீர்த்தம் சாதிக்கிறார்; தாயாருக்குத் தெப்பம் நடக்கிறது.

## வெள்ளிக்கிழமை மண்டபம்

குளத்தின் மேலண்டைக்கரையில் பிரகார பெரிய மண்டபத்திற்குள் ஓர் அழகிய மண்டபமிருக்கிறது. இதில் பிரதி வெள்ளிக்கிழமையிலும் கமலவல்லித்தாயார் எழுந்தருளி உத்ஸவம் கண்டருளுகிறார். நவராத்திரி உள்கோடை உத்ஸவங்களும் இந்த மண்டபத்திலேயே நடக்கின்றன. உள்கோடை உத்ஸவத்தில் இந்த மண்டபத்திலிருந்து புறப்பட்டு வீணை வாத்தியத்துடன் சந்நிதிக்கு எழுந்தருளுவார்.

ஸ்ரீ ரங்கநாதன் தமது பங்குனி உத்ஸவம் ஆறுந் திருநாளில் இந்தச் சந்நிதிக்கு எழுந்தருளி இதே மண்டபத்தில் கமலவல்லித் தாயாருடன் ஏகாசனத்திலிருந்து சேவை சாதிக்கிறார்.

## மடப்பள்ளி

இது குளத்தின் தென்கரையிலிருக்கிறது. புதிதாய்க் கட்டப்பட்டது. இதில் தாயார், பெருமாளுக்கு நிவேதனம் தளிகை செய்யப்படுகிறது. நித்தியப்படி ஹோமங்கள் இவ்விடத்தில் நடக்கின்றன.

## வஸந்த மண்டபம்

இது மடப்பள்ளிக்கு மேற்கிலும் பிரகார மண்டபத்திற்குத் தெற்கிலுமிருக்கிறது. இதில் வைகாசி அல்லது ஆனி மாதத்தில் கமலவல்லித்தாயாருக்கு ஏழு நாள் வசந்த உத்ஸவம் நடக்கிறது.

## ஊஞ்சல் மண்டபம்

இது சந்நிதியின் தென்மேற்கு மூலையில் வஸந்த மண்டபத்திற்கு வடபுறத்திலிருக்கிறது. இந்த உத்ஸவம் விசேஷமாய் கார்த்திகை மாதத்தில் நடக்கும். இதுவும் ஏழுநாள் உத்ஸவம் தான். இந்த உத்ஸவத்தின் கடைசிநாள் தாயார் மண்டபத்தினின்றும் புஷ்பப் பல்லக்கில் புறப்பட்டுச் சந்நிதிக்கு எழுந்தருளுவார்.

## யாகசாலை

இது சந்நிதியின் மேலண்டைப் பிரகாரத்தின் மத்தியிலிருக்கிறது. இதில் ரக்ஷாபந்தன உத்சவங்களில் நடக்கவேண்டிய ஹோமங்கள் நடத்தப்படும்.

## தெப்ப மண்டபம்

இந்த மண்டபம் கோவிலின் பிரகார மண்டபத்தின் வடமேற்கு மூலையில் நம்மாழ்வார் சந்நிதிக்கு எதிரிலிருக்கிறது. தெப்ப உத்சவத்தில் தாயார் இதில் எழுந்தருளி ஆராதனம், நிவேதனம் முதலானவை நடத்தப்படுகின்றன. பிரதி வருஷம் மாசிமாதம் கிருஷ்ணபக்ஷ தசமியில் தெப்பமும், ஏகாதசியன்று பந்தக்காட்சியும் நடைபெறும். இவ்விரண்டு தினங்களிலும் கமலவல்லி நாச்சியார் மண்டபத்திலிருந்து சந்நிதிக்குப் போகும் போது புஷ்பப் பல்லக்கில் புறப்பட்டு வீதிவலம் வந்து

அதன்பின் சந்நிதிக்குள் செல்வார். கமலவல்லித்தாயாருக்கு உறையூர் பிறந்த அகமானதால் படி தாண்டி வெளியில் செல்லக்கூடாது என்கிற நிபந்தனை கிடையாது. ஆகையால் வீதிவலம் வருகிறார்.

## அத்யயன உத்சவ மண்டபம்

தெப்ப மண்டபத்திற்கு வடக்கிலும் கோவிலின் வடமேற்கு மூலையிலுமுள்ள திறந்த வெளியில் இந்த நான்குகால் மண்டபமிருக்கிறது. இந்த மண்டபத்தைச் சுற்றிக் கொட்டகைபோட்டுச் சிங்காரிக்கப்பட்டுத் திருவாய்மொழித் திருநாள் என்கிற இராப்பத்து உத்ஸவம் தைமாதம் கிருஷ்ணபக்ஷம் ஏகாதசி முதல் ஐந்து நாளைக்கு நடக்கும். கொட்டகையிலுள்ள நம்மாழ்வார், திருப்பாணாழ்வார், உடையவர் இவர்களுடன் தாயார் மண்டபத்தில் எழுந்தருளியிருந்து அரையர் அத்யாபகர்களால் சேவிக்கப்படும் ஆழ்வார் பாசுரங்களைக் கேட்டருள்வர். கொட்டகைக்கு வரும் முன் யாகசாலைக்குப் பக்கத்தில் வேத விண்ணப்பம் நடக்கும். யாகசாலையை ஒட்டியிருக்கும் பரமபதவாசல் வழியாய்க் கொட்டகைக்கு வருவார்.

இந்த மண்டபத்திலிருந்து தாயார் சந்நிதிக்கு எழுந்தருளும்போது வீணை வாத்தியத்தைக் கேட்டுக்கொண்டு போவார்.

## சந்நிதியின் முன் மண்டபம்

இந்த மண்டபத்திற்குப் போக மேல் பக்கத்திலும், கீழ்ப்பக்கத்திலும் வாசல்களிருக்கின்றன. இவைகளில் கீழண்டையுள்ளதே பிரதானமானது. துவாரபாலகர்களோடு கூடியிருக்கிறது. இந்த வாசல் வழியாகத்தான் தாயார் வெளியே போவதும், உள்ளே வருவதும் வழக்கமாயிருக்கிறது. ஸ்ரீரங்கநாதன் இந்தச் சந்நிதிக்கு வரும்

போது இந்த வாசலில் நுழைந்தே கமலவல்லித் தாயாருக்கு முன் எழுந்தருளி ஏகாந்தம் நடக்கின்றது.

இந்த மண்டபம் மிக்க விசாலமானது. இதிலுள்ள சில ஸ்தம்பங்கள் வெகு அழகாக வேலை செய்யப்பட்டிருக்கின்றன. இந்த மண்டபத்தின் மத்திய அங்கணத்தில் வெளிச்சத்திற்காகக் கண்ணாடிகள் அமைக்கப்பட்டு மண்டபம் பிரகாசமாயிருக்கிறது.

## சந்நிதி கருடன் கோயில்

மேற்படி மண்டபத்தின் வடக்கு ஓரத்தில் இந்தச் சந்நிதி இருக்கிறது. இவர் நிவேதனத்திற்காகத் தனிப் படித்தரம் ஏற்பட்டிருக்கிறது.

## மஹா மண்டபமும் அர்த்த மண்டபமும்

முன் மண்டபத்திலிருந்து தெற்கு முகமாய் உள்ளே சென்றால் இந்த மண்டபமிருக்கிறது. இதில் தாயார் பெருமாளுக்குத் தளிகை சமர்ப்பிக்க ஓர் அமுது பாறையிருக்கிறது.

இந்த அமுது பாறையில் ஸமர்ப்பிக்கப்படும் சிம்மாசனத்தில் கமலவல்லி வீற்றிருந்து பகல் பத்து ஐந்துநாள் உத்சவத்தில் அரையர் அத்யாபகர்களால் முன் மண்டபத்திலிருந்து சேவிக்கப்படும் பிரபந்தங்களைக் கேட்டருள்வார். அதுசமயம் நம்மாழ்வார், திருப்பாணாழ்வார், உடையவர் ஆகிய மூவரும் முன் மண்டபத்திலேயே எழுந்தருளியிருப்பார்கள்.

கர்ப்பக்கிரகத்தையும் அர்த்த மண்டபத்தையும் சுற்றியுள்ள திருவெண்ணாழி என்னும் பிரதக்ஷணத்திற்குப் போக வாசல் இந்த மண்டபத்திலிருக்கிறது.

இந்த மண்டபத்திலிருந்து உள்ளே சென்றால் அர்த்த மண்டபமும் கர்ப்பக் கிரஹமும் இருக்கின்றன.

## கர்ப்பக் கிரஹம்

இந்த இடத்தில் ரங்கநாதனுன அழகிய மணவாளன் மூலவர் ஒரு கையில் ப்ரயோக சக்கரத்தையும் மற்ருெரு கையில் சங்கையும் ஏந்திக்கொண்டும் இன்னெரு இடது கையில் கதையைப் பிடித்துக் கொண்டும், வலது ஹஸ்தத்தினுல் அபயப்ரதானம் பண்ணிக்கொண்டும் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளியிருக்கின்ருர். நாச்சியாரான கமலவல்லி மூலவரும் பெருமாளுக்கு வலது பக்கத்தில் தம்மைப் பெரிய பிராட்டியான ஸ்ரீதேவியின் அம்ஸமென்று காட்டிக்கொடுக்கும் பொருட்டு வலது திருக்கையில் தாமரைப் புஷ்பத்தைப் பிடித்துக்கொண்டும் இடது கையை வரத ஹஸ்தமாய் வைத்துக் கொண்டும் உட்கார்ந்திருக்கிருர். பெருமாள் நின்று கொண்டும் தாயார் உட்கார்ந்து கொண்டும் சேவை ஸாதிப்பதற்குக் கல்யாண அவசரம் என்று பெயர். கமலவல்லித் தாயார் ரங்கநாதனை மணந்து கொண்ட இடமாதலால் இந்த ஊரில் கல்யாண அவசரமாய் சேவை கொடுக்கிருர்.

மூலவருக்கு முன்புள்ள ஸிம்மாசனத்தில் கமலவல்லித் தாயார் உத்ஸவர் மூலவரைப் போலவே வீற்றிருந்த கோலமாய்க் காட்சி யளிக்கிருர். இவருக்குப் பிரமோத்சவம் நீங்கலாக சகல உத்சவங்களும் நடக்கின்றன.

## உத்சவங்கள்

கமலவல்லி நாச்சியாருக்கு வெள்ளிக்கிழமை புறப்பாடு, நவராத்திரி ஊஞ்சல், அத்யயன உத்ஸவங்கள், தெப்பம், பந்தக்காட்சி, கோடை, வஸந்தன் முதலான உத்ஸவங்களும் ஜேஷ்டாபிஷேகமும் நடக்கின்றன. ஸ்ரீ ரங்கநாச்சியாரைக் காட்டிலும் கமலவல்லிக்கு அதிக

மாயுள்ளது வெள்ளிக்கிழமை புறப்பாடும் தெப்பம், பந்தக்காட்சி உத்ஸவங்களும்.

## நி வே த ன ங் க ள்

அழகிய மணவாளனுக்கும், கமலவல்லிக்கும் பிரதி தினமும் ஸ்ரீ ரங்கத்திலுள்ளதுபோல் நான்கு காலமும் ஆராதன நிவேதனங்கள் நடக்கின்றன. பொங்கல், பெரிய அவசரம், க்ஷீரான்னம், சம்பா அரவணை முதலான பிரசாதங்களும் நிவேதனம் செய்யப்படுகின்றன.

## சந்நிதியின் ஜீர்ணோத்தாரணம்

இந்தச் சந்நிதியின் தளவரிசைகள் மண்டபங்கள், விமானம், மடப்பள்ளி, முதலான கட்டிடங்கள் காலஞ் சென்ற ஸ்ரீமான் ஸர். டி. தேசிகாச்சாரியார் அவர்களின் பிரயத்தனத்தாலும், பரிச்சிரமத்தினாலும், மேற்பார்வையினாலும் சுமார் ரூ. 70,000-க்கு குறையாமல் செலவு செய்யப்பட்டுச் சீர்திருத்தம் செய்யப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் நூதனமாய்க் கட்டப்பட்டும் இருக்கிறது. ஜீர்ணோத்தாரணத்திற்குப் பிறகு கோவில் நூதனமாய் நிர்மாணிக்கப்பட்டதுபோல் வெகு அழகாக விளங்குகிறது. தென்னிந்தியாவில் இவ்வளவு அழகாயும், சௌகர்யங்களோடும் கூடிய கோவிலைக் காண்பதரிது என்று சொல்லலாம் என்று தோன்றுகிறது. மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. காலஞ்சென்ற ஸ்ரீமான் ஸர். டி. தேசிகாச்சாரியார் அவர்கள் இக்கோவிலுக்குச் செய்த நன்மைகளை என்றும் மறவாமல் இருப்பதற்காக அவர்களுடைய உருவப்படம் ஒன்று செய்து ஷை தேவஸ்தானம் ஆபீசில் மாட்டப்பட்டிருக்கிறது.

சேனை முதலியார் விக்கிரஹ சீர்திருத்தமும், ஆழ்வாராதிகளின் விமானங்கள் கோபுரம் இவைகளைப் புதுப்

பிக்க வேண்டியதும் பாக்கியா யிருக்கிறது. தர்ம சிந்தனை யுள்ளவர்கள் இந்தக் கைங்கர்யங்களைச் செய் தால் ஜீர்ணோத்தாரணம் பூர்த்தி அடையும்.

## வரவு செலவு

இந்தச் சந்நிதிக்கு வரும்படி வரக்கூடிய நிலபுலம் வகையரா கிடையாது. நித்தியப்படி படித்தரத்திற்கும் அதிகப்படி உத்ஸவங்களுக்கும் வருஷத்தில் சுமார் பதிஞ யிரம் ரூபாய் வரையில் செலவு ஆகிறது. இந்தச் செலவு ரங்கநாதஸ்வாமியினுடைய ஐவேஜியிலிருந்தே செய்யப் படுகிறது.

தேமா மலர்க்கயஞ்சூழ் கோயின் மேவுந் திருவரங்கர்
தாமா தரித்த திருத்தேவி மாரிற் றரங்கவுடைப்
பூமாது நாளும் புரத்தே சுமந்து புரக்கு **மலர்**
**மாமாது** செல்வங் கொடுத்தேயுயிர்களை வாழ்விக்குமே.

மங்களம்

ஸ்ரீ

# கஜாரண்ய க்ஷேத்திரமென்னும்

# காட்டழகியசிங்கர் சந்நிதி வைபவம்

எழுதியவர் :

**எஸ். நரஸிம்ம அய்யங்கார்,**

உத்தம நம்பி திருமாளிகை, மேல உத்தரவீதி, ஸ்ரீரங்கம்

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை.

1941

# முகவுரை

இச்சிறிய நூல் சுருக்கமாகவும், தெளிவாகவும் வெளித் தேசங்களிலிருந்து வரும் யாத்திரீகர்களுக்கு இந்தச் சந்நிதியைப்பற்றி விவரமாகத் தெரிந்து கொள்வதற்காக எழுதப் பட்டிருக்கிறது. இப்புத்தகம் எழுதுவதற்கு முக்கிய காரணமாய் உள்ள சென்னை இந்துமத பரிபாலனபோர்டு கமிஷனர், ராவ்பகதூர் - ஸ்ரீமான் சி. எம். இராமச்சந்திர செட்டியார் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்காக என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் இதனால் தேவஸ்தானம் சார்பாகச் செலுத்துகிறேன். இப்புத்தகம் எழுதுவதற்கு வேண்டிய விஷயங்கள் தெரிந்துகொண்டு அதிக ஊக்கத்துடன் உதவிசெய்த உத்தம நம்பி திருமாளிகையில் இருக்கும் ஸ்ரீமான் எஸ். நரஸிம்மய்யங்கார் அவர்களுக்கும் நான் எனது நன்றியைச் செலுத்துகிறேன்.

ஸ்ரீரங்கநாதஸ்வாமி<br>வகையரா<br>தேவஸ்தானம்,<br>ஸ்ரீரங்கம்.

**D. மாதவன் பிள்ளை, B.A., B.L.,**<br>ஆக்டிங் எக்ஸிகியூடிவ் ஆபீஸர்.

ஸ்ரீ

# கஜாரண்ய க்ஷேத்திரமென்னும்

# காட்டழகிய சிங்கர் கோவில்

இந்தக் கோவில் ஸ்ரீரங்கம் சப்தபிரகாரத்திற்கு வெளியில் ஸ்ரீரங்கம் ரயில்வேஸ்டேஷனுக்கு வடக்கிலுள்ள ரயில்வே கேட்டுக்குக் கிழ்ப்புரம் ஒரு பர்லாங்கு தூரத்திலுள்ளது. ஸ்ரீரங்கநாதனுடைய கோவிலுக்குச் சம்பந்தப்பட்டு அதன் வரவு செலவுக்கு உட்பட்டிருக்கிறது, இந்தச் சந்நிதியில் ஆராதனத்திற்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் பிரதிதினமும் ஸ்ரீரங்கநாதனின் கொட்டாரத்திலிருந்து கொடுக்கப்பட்டுவருகிறது.

இந்தச் சந்நிதிக்குக் கஜாரண்ய க்ஷேத்திரம் என்று பெயர். ஒரு காலத்தில் இந்தப் பிரதேசம் காடுமண்டிப் போய் யானைகளும் வந்து சஞ்சாரம்பண்ணி ஹிம்ஸை செய்ய ஆரம்பித்தன. யானைகளின் தொந்தரவை நீக்கும்பொருட்டு இந்தச் சந்நிதியிலுள்ள நரசிம்மன் பிரதிஷ்டை செய்யப்பட்டுக் கோவிலும் கட்டப்பட்டது. யானைக் காட்டிலிருந்த நிமித்தம் இந்த நரசிம்மனுக்குக் காட்டழகிய சிங்கர் என்ற பெயருண்டாயிற்று.

இந்தக் கோவிலுக்குச் சுற்று மதில்களோடு கூடிய பிரகாரம் ஒன்று இருக்கிறது. பெருமாள் மேற்கு முகமாய் எருந்தருளியிருப்பதால் இந்தப் பிரகாரத்தின்

வாசலும் மேலண்டைப்பக்கத்திலிருக்கிறது. இந்த வாசலுக்கு மேற்கில் கொஞ்ச தூரத்தில் மற்ெருரு வாசல் இருக்கிறது. வெளியிலிருந்து இந்தச் சந்நிதிக்கு வருபவர்கள் இந்த வாசலில் நுழைந்து உட்சென்ருல் வடபுறத்தில் ஒரு குளமிருக்கிறது. இக்குளம் தற்சமயம் பாழ் அடைந்து இருக்கிறது. இதைச் சீர்திருத்தவும் தேவஸ்தானத்தில் வேண்டிய சிந்தனை செய்து கொண்டிருக்கிருர்கள். முக்கியமாக வேண்டியது பொதுஜனங்களின் உதவியும் திரவிய சகாயமுமே. இந்தக் குளத்தில் காலலம்பிக் கொண்டு உள்ளே சென்ருல் ஒரு மண்டபமும் பலி பீடமும் இருக்கின்றன. அவைகளையும் தாண்டிப் பிரகார வாசலுக்குள் நுழைந்தால் ஒரு விசாலமான மண்டபமிருக்கிறது.

இந்த மண்டபத்தில் அநேக கல்யாணங்கள் நடைபெறுகின்றன. கல்யாணத்தை நடத்த வருகிறவர்கள் தங்கள் சாமான்களை வைத்துக்கொண்டு உட்காரவேண்டிய வசதிக்காக அறைகள் இருக்கின்றன. இக்கல்யாணங்களைத் தேவஸ்தானத்திய அதிகாரிகள் நேர்பார்வையிலேயே, காண்ட்ராக்டில் விடாமல் அதிக சிரத்தையுடன் பொது ஜனங்களுக்கு வேண்டிய சவுகரியத்தைக் கொடுத்து நடத்திவைக்கப்படுகிறது. இந்தக் கோவிலில் மின்சார விளக்குகள் போடப்பட் டிருக்கிறபடியால் கல்யாணம் நடத்துபவர்களுக்கு மிக்கஉதவியை அளித்து வருகிறது. இந்தச் சந்நிதியின் த்வஜஸ்தம்பம் இந்த மண்டபத்தின் மத்தியிலிருக்கிறது.

இந்தப் பிரகாரத்தின் கீழ்ப்பாகத்தில் மடப்பள்ளிகள் இருக்கின்றன. தென்கிழக்கு மூலையிலுள்ள

மடப்பள்ளியில் பெருமாளுடைய நிவேதனத்துக்கு வேண்டிய தளிகை பிரசாதங்கள் சமைக்கப்படுகின்றன. வடகிழக்கிலுள்ள மடப்பள்ளி, இந்தச் சந்நிதியில் நடக்கும் ததியாராதன வனபோஜனங்களுக்குத் தளிகை செய்ய உபயோகப்படுகிறது.

சந்நிதியானது சுமார் 10 அடி உயரமுள்ள அஸ்தி வாரத்தோடு கூடிய கட்டிடத்தின்பேரில் கட்டப்பட்டிருக்கிறது. ஆனபடியால் முன்மண்டபத்திற்குப் போக வடபுறத்திலும் இடபுறத்திலும் படிக்கட்டுகள் இருக்கின்றன. இந்த முன் மண்டபத்தில் சந்நிதி கருடன் கோவில் இருக்கிறது. இந்த மண்டபத்தின் சுவற்றில் அஹோபிலத்தில் உள்ள அஷ்ட நரசிம்மன்களின் பிம்பங்கள் சித்திரத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

முன் மண்டபத்திலிருந்து உள்ளே சென்றால் மஹா மண்டபமிருக்கிறது. அதற்கு உட்புறத்தில் அர்த்த மண்டபமிருக்கிறது. அதில் தளிகை சமர்ப்பிக்கும் அமுதுபாறை இருக்கிறது. அதற்கும் உட்புறம் சென்றால் கர்ப்பக்கிரகம் தோன்றும். அதில் லக்ஷ்மி நரஸிம்மன் எழுந்தருளியிருக்கிறார். இவர் சுமார் எட்டு அடிக்குக் குறையாமல் உயரத்துடன் தமது இடது திருத்தொடையின்பேரில் ஸ்ரீமஹா லக்ஷ்மியை உட்காரவைத்துக் கொண்டும் அவர் இடது கையால் அணைத்துக்கொண்டும் வலதுகையால் அபயப்ரதானம் பண்ணிக்கொண்டும் உட்கார்ந்த திருக்கோலமாய் சேவை அளிக்கிறார்.

இந்தக் கோவிலில் இந்த மூலவரான சிலாபிம்பத்தைத் தவிர உத்ஸவ பிம்பம் கிடையாது. ஆகையால் உத்ஸவங்களும் புறப்பாடுகளும் இந்த சந்நிதியில் கிடை

யாது. தேவஸ்தான திட்டப்படியும் பிரார்த்தனைக் காரர்களின் கோரிக்கையின் படியும் நடத்தப்படும் திரு மஞ்சனங்கள் இவருக்கே செய்யப்படுகின்றன. இவர் மிக வும் வரப்பிரஸாதி. குரூரமில்லாமல் வெகு சாந்தமாய் சேவை கொடுப்பவர். சனிக்கிழமைகளில் ஜனங்கள் இந்தக் கோவிலுக்குச்சென்று பிரதக்ஷணம் அர்ச்சனை நமஸ்காராதிகளைச் செய்வது வழக்கம். புரட்டாசி மாதம் சனிக்கிழமைகளில் ஸேவார்த்திகளின் கூட்டம் அதிகமா யிருக்கும். இவருக்குத் தினமும் நாலுகாலம் ஆராதனம் நடந்து வருகிறது.

இந்த நரஸிம்மனுக்கு ஆனிமாதம் சுவாதி திரு நக்ஷத்திரம். இந்தத் திருநக்ஷத்திர தினத்திலும் ஆடி மாதத்தில் நடத்தப்படும் ஜ்யேஷ்டாபிஷேகத் தினத் தன்றும் காவேரியிலிருந்து மேளவாத்தியங்களுடன் யானையின் பேரில் திருமஞ்சனம் கொண்டுவந்து விமரிசையாய்த் திருமஞ்சனம் நடத்தப்படுகிறது. மேலே சொன்ன இரண்டு தினங்களிலும் நரஸிம்ம ஜயந்தி, யுகாதி பண்டிகைகளிலும் ரங்கநாதன் சந்நிதியிலிருந்து அலங்காரம் முதலானவை அனுப்பப்படுகின்றன.

இந்தக் கோவிலுக்கு வெளியில், இந்தக் கோவிலைச் சேர்ந்த நிலத்தில் ஒரு பெரிய மண்டபமிருக்கிறது. அதில் ஸ்ரீ ரங்கநாதனுக்கு விஜயதசமி மண்டகப்படி நடக்கிறது. விஜயதசமி தினம் ஸ்ரீ ரங்கநாதன் அந்த மண்டபத்துக்கு வந்து தளிகை முதலானது அமுது செய்து சாயந்திரம் குதிரை வாகனத்தில் புறப்பட்டு இந்தக் கோவில் வாஸலுக்கு எதிரிலுள்ள நாலுகால் மண்டபத்தில் நின்றுகொண்டு எதிரிலுள்ள வன்னி

விருக்ஷத்தை நோக்கி அம்பு போட்டுவிட்டுத் தமது சந்நிதிக்கு எழுந்தருளுகிறார்.

இந்தச் சந்நிதியிலுள்ள நரசிம்மன் மிகவும் வரப்பிரசாதியாய் சேவார்த்திகளின் அரிஷ்டங்களைப் போக்கிச் சகல அபீஷ்டங்களையும் அளிக்குமவராயிருப்பதால் சகலரும் வந்து வழிபட்டு இகபரசுகங்களைப் பெற வேண்டியது அவசியம்.

சுபம்

66099

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ... MA...